# தலைப்பு: உறவுக்கு கரம்கொடுப்போம்!




வழங்கியோர்

**உறவுக்கு கரம்கொடுப்போம்!**

இழிவுதனைச் சுமப்பதற்கா பிறப்பெடுத்தோம்?
இணக்கமின்றி வாழ்வதற்கா இல்லம் கண்டோம்?
பழிசுமத்திப் பண்புதனை இழந்து விட்டு
பசப்புமொழித் துணைதேடும் கழிசடைக்கா
வழிமாறித் துதிபாடி வல்லாண் மையின்
வலைப்பின்னல் சிக்கலுக்குள் வீழ்ந்து போனோம்?
குழிபறிக்கும் குணத்தோரின் அழிவுப் பாதை
குமுகத்தின் சீர்மையினைத் தகர்த்திடாதா?
துணிவுதனை உள்ளத்தின் திறவுகோலாய்
தூய்மைவழி நட்புதனை ஏற்றுக் கொண்டு
பணிவுதனை பண்பாட்டைக் காக்கும் நோக்கில்
பக்குவமாய் உறுதியுடன் பரவச் செய்து
மணம்மிக்க மலர்நாடித்
தேனைச் சேர்த்து
மலர்ச்சிக்குத் துணைநிற்கும் சுரும்பைப் போல
கணக்காக கச்சிதமாய் உறவைப் பேணி
காசினியின் உயர்வுக்குக் கரம்கொடுப்போம்!

**அ. அரவரசன்.**
**தேவகோட்டை.**

**உறவுக்கு கரம்கொடுப்போம்!**

ஓய்ந்த நம் உழவுக்கும்
கரம்கொடுப்போம்!

உயரிய தாவர உரம்தூவி
வீரிய வித்தாய்
நெல் விதைதந்த உழவனை
தொழுது தொடர்ந்து
மான்பு காப்பதே மரபு!

பஞ்சம் பசி பட்டினி
பாரினோர் உணராது
வியர்வை கசிய வித்திட்ட உறவை
கரம் கொடுத்துக்
காப்பது நம் கடனே!

**கா. பெரியசாமி காரைக்குடி**

**உறவுக்கு கரம்கொடுப்போம்!**

உறவுக்குக் கரம் கொடுப்போம்
உள் மனதின் வலியறிந்து
பிறருக்கு நிழல் கொடுத்து
பிறந்த நம் பயனடைவோம்

செய் நன்றி மறவாமல்
செஞ்சோற்று கடன் தீர்ப்போம்
மெய் அன்பு குறையாமல்
மெய் சிலிர்க்க வைத்திடுவோம்

அன்புக்கு இடம் கொடுப்போம்
அச்சங்கள் அணைத்து விடுவோம்
இன்பங்கள் தழைத்து ஓங்க
இணைந்து துயர் துடைப்போம்

உயர்வுக்கு வழி வகுப்போம்
உன்னத உலகில் கால்பதிக்க
இயல்பாய் இன்புற்று வாழ்ந்திடவே
இங்கிதமாய் இணைந்து கரங்கொடுப்போம்.

**சரளா விமலராஜா**
**சுவீஸ்**